# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 222/மா/2024

நாள்: 16 .03.2026

A. கணேசன்,
மதுரை. -- முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர்,
மண்டலம் 5 (மேற்கு),
மதுரை மாநகராட்சி. -- எதிர்மனுதாரர்

மதுரை–06, திருநகர், SRV நகர், பாலாஜி 4–வது தெரு கதவு எண் 28 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A.கணேசன் என்பவரின் 30.10.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.11.2024 அன்று பெறப்பட்டு 222/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை–06, திருநகர், SRV நகர், பாலாஜி 4–வது தெரு, கதவு எண் 28 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A.கணேசன் என்பவர் தனது 30.10.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள 05.10.2024 நாளிட்ட புகார் மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகின்றேன். இது மதுரை மாநகராட்சி, வார்டு 95, மண்டலம் 5 (மேற்கு) திருப்பரங்குன்றம் எல்லைக்கு உட்பட்டதாகும். இதே பகுதியில் பிளாட் எண் 26ல் வசித்து வரும் திரு. சிவக்குமார் (9942961055) மற்றும் பிளாட் எண் 27ல் வசித்து வரும் திரு. சேகர் (8098460430) ஆகிய இருவரும் அனைவருக்கும் பொதுவான மாநகராட்சி ரோட்டில் (20 அடி அகலம் 29.5 அடி நீளம்) மற்றவர்கள் யாரும் பயன்படுத்தக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில் ஆக்கிரமிப்பு செய்து வருகிறார்கள். நான் பலமுறை மாநகராட்சி அலுவலகத்திற்கு சென்று உதவி ஆணையாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகிய இருவரையும் சந்தித்து ஆக்கிரமிப்பை எடுக்கக் கோரி பல புகார் மனுக்கள் கொடுத்தும் எந்த பயனும் இல்லை. நானும் பலமுறை போராடியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த சூழ்நிலையில் உதவி ஆணையாளர் (பொ), மண்டலம் 5 (மேற்கு) அவர்களிடம் இருந்து கடிதம் ந.க. எண் ம5ஈ1/000291/2024 நாள் 06.08.2024 எனக்கு கிடைத்தது. அதில் உதவிப் பொறியாளர் குறிப்பு நாள் 06.08.2024ன்படி ஆக்கிரமிப்பாளர்களே ஆக்கிரமிப்பை அகற்றும்படி அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே ஆக்கிரமிப்பை எடுக்க தவறும் பட்சத்தில் மாநகராட்சியின் மூலம் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என்ற விபரம் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது என்ற தகவல் தெரிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் கடிதம் கொடுக்கப்பட்டு இன்றுடன் 2 (இரண்டு) மாதங்கள் ஆகி விட்டது. இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மீண்டும் இது விசயமாக உதவி ஆணையாளர் அவர்களை நேரில் சந்தித்தேன். எந்த பதிலும், நடவடிக்கையும் எடுக்கப்படுவதாக எனக்கு தெரியவில்லை. எனவே தாங்கள் இந்த

மனுவின் மீது சட்டப்படி, நியாயமான முறையில் பொது ரோட்டில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் உதவி ஆணையாளர் அவர்கள் கொடுத்த கடிதத்தின் நகலை இத்துடன் இணைத்துள்ளேன்.''

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 27.11.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி, மண்டலம் 5 (மேற்கு)–ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது. அறிக்கை பெறாததால், மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு) உதவி ஆணையருக்கு 03.04.2025 நாளிட்ட நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டது.

3. இருப்பினும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவ மன்றத்தில் 24.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.02.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில் மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு) உதவி ஆணையாளர் தன்னுடைய 23.02.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

> ''12.02.2026 நாளிட்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முறையீட்டு மனு விசாரணை அழைப்பாணையுடன் இணைத்து வரப்பெற்ற திரு. A.கணேசன் என்பவரின் 30.10.2024–ம் தேதிய மனு பரிசீலனை செய்யப்பட்டது.
>
> 20.02.2026 நாளிட்ட மதுரை மாநகராட்சி உதவி பொறியாளர் (திட்டம்) குறிப்பின்படி, மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு) வார்டு எண்.95ல் உள்ள SRV நகர் பாலாஜி 4வது தெருவில் பிளாட் எண்.26 மற்றும் 28ற்கு இடையில் மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு ஏற்கனவே கடந்த 07.11.2022 அன்று அகற்றப்பட்டது. மேலும் அவ்வப்போது இருந்த சிறு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளது. மேலும் தற்போது கள ஆய்வு செய்ததில் மேற்கூறிய இடத்தில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் 24.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

6. எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு)–ன் உதவிப் பொறியாளர் 24.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> ''மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி, மண்டலம் 5 (மேற்கு) வார்டு எண்.95ல் உள்ள SRV நகர் பாலாஜி 4வது தெருவில் பிளாட் எண்.26 மற்றும் 28ற்கு இடையில் உள்ள ஆக்கிரமிப்பு ஏற்கனவே, கடந்த 07.11.2022 அன்று அகற்றப்பட்டது. மீண்டும் சிறு ஆக்கிரமிப்புகள் இருந்த நிலையில் 06.08.2024 அன்று தாக்கீது அளிக்கப்பட்டு அவ்வாக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன. அதற்குரிய புகைப்படம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தற்போது கள ஆய்வு செய்ததில் மேற்கூறிய இடத்தில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை என்ற விபரம் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

7. மனுதாரரின் மனு, எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு)–ன் உதவி ஆணையரின் அறிக்கை, மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

> மதுரை மாநகராட்சி, வார்டு 95, மண்டலம் 5 (மேற்கு) திருப்பரங்குன்றம் எல்லைக்கு உட்பட்ட திருநகர் புதுத் தெரு, பிளாட் எண் 26ல் வசித்து வரும் திரு. சிவக்குமார் மற்றும் பிளாட் எண் 27ல் வசித்து வரும் திரு. சேகர் ஆகியோர் மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான சாலை ஆக்கிரமிப்பு குறித்து மதுரை மாநகராட்சி மண்டலம் 5–ன் அலுவலகத்திற்கு புகார் மனு கொடுத்தும் இதுவரை ஆக்கிரமிப்புகளை அகற்றாததால்,

அவ்வாக்கிரமிப்புகளை அகற்ற மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனுவிலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி, மண்டலம் 5 (மேற்கு) வார்டு எண்.95ல் உள்ள SRV நகர் பாலாஜி 4வது தெருவில் பிளாட் எண்.26 மற்றும் 28ற்கு இடையில் உள்ள ஆக்கிரமிப்பு ஏற்கனவே, கடந்த 07.11.2022 அன்று அகற்றப்பட்டது என்பதும், மீண்டும் சிறு ஆக்கிரமிப்புகள் இருந்த நிலையில் 06.08.2024 அன்று தாக்கீது அளிக்கப்பட்டு அவ்வாக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டுவிட்டன என்பதும், தற்போது கள ஆய்வு செய்ததில் மேற்கூறிய இடத்தில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை என்பதும் மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு)–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்ட மதுரை மாநகராட்சி, மண்டலம் 5 (மேற்கு) வார்டு எண்.95ல் உள்ள SRV நகர் பாலாஜி 4வது தெருவில் பிளாட் எண்.26 மற்றும் 28ற்கு இடையில் உள்ள ஆக்கிரமிப்பு ஏற்கனவே அகற்றப்பட்டது என்றும், மீண்டும் சிறு ஆக்கிரமிப்புகள் இருந்த நிலையில் தாக்கீது அளிக்கப்பட்டு அவ்வாக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டுவிட்டன என்றும், தற்போது மாநகராட்சியால் கள ஆய்வு செய்ததில் மேற்கூறிய இடத்தில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை என்றும் மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு)–ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதால், மனுதாரரின் மேற்கண்ட மனு மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. A.கணேசன்,
கதவு எண் 28, பாலாஜி 4–வது தெரு,
SRV நகர், திருநகர், மதுரை–625 006

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி, மதுரை.

(3) உதவி ஆணையர், மண்டலம் 5 (மேற்கு),
மதுரை மாநகராட்சி, TPK Old Municipal Office,மதுரை–625 005.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(5) இணை இயக்குநர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032